

# 'இவங்க தான் உன் அப்பா...'


1

எனக்கு, அப்போது, மூன்று வயதுதான் இருக்கும். வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த என்னை, பெரியம்மா அழைத்து, 'இவதான் உன் அம்மா...' என்று அறிமுகப்படுத்தினார்.

இப்படி, அம்மாவை, ஒரு மகனுக்கு அறிமுகப்படுத்திய படலம், எத்தனை மகன்களின் வாழ்வில் நடந்திருக்குமோ, எனக்கு தெரியாது.

'என்னது! பெற்ற அம்மாவை, இன்னொரு அம்மா அறிமுகப் படுத்துவதா? ஒரே குழப்பமாக இருக்கிறதே என்கிறீர்களா...? தீர்க்கிறேன்.

என் பெரியம்மாவுக்கு, குழந்தைகள் இல்லாத காரணத்தால், தன் தங்கை மகனான என்னை எடுத்து வளர்க்கப் பிரியப்பட்டார். நண்டும் சிண்டுமாக (எங்கள் பகுதிச் சொல் வழக்கு) நாங்கள் நால்வர் இருக்கவே, குறும்பு மகனான என்னை விட்டுக் கொடுக்க அம்மா சம்மதித்தார்.



லேனா தமிழவாணன்

இதற்கு இருவிதக் காரணங்கள் இருந்தன. முதலாவது, சிறு வயதில் தன் தாயை இழந்த என் அம்மாவுக்கு, பெரியம்மா தான், தாயாக இருந்து பார்த்துக் கொண்டார். மகப்பேறுக்கு தாய் வீட்டிற்கு போவர் அல்லவா? என் அம்மா வந்தது பெரியம்மா வீட்டிற்கு.

தாய்க்குத் தாயாய் இருந்து, தன்னைப் பார்த்துக் கொண்டவர்களின் விருப்பத்தை எப்படி மறுப்பது? இது, முதல் காரணம்.

இரண்டாவது, நாங்கள் நான்கு பிள்ளைகள். அப்பா, அந்தக் காலத்து எழுத்தாளர். வருமானம் ஒன்றும் பிரமாதமில்லை. எனவே, ஒரு பிள்ளை குறைந்தால் கொஞ்சம் சமாளிக்கலாம். நான்கு பங்கை, மூன்று பங்காக்கி வைத்தால் மூன்றின் வயிறு நிரம்பும் என அம்மா சிந்தித்திருக்க வேண்டும். எனவே, பெரியம்மா கேட்டதுமே, மறுக்க இயலாமல் சம்மதித்தார்.

பெரியம்மாவை, நான் ஆத்தா என்றே கூப்பிட்டுப் பழகினேன். பெரியப்பா திரு.முத்துராமன், அப்பச்சி ஆகிப்போனார்.

இந்தப் பின்னணியில், சென்னையிலிருந்து என்னைப் பார்க்க வந்திருந்த, என் அம்மாவை எனக்கு அறிமுகப்படுத்தினர்.

'இவ தான் உங்க அம்மா...'

எனக்கோ ஒன்றும் புரியாத பருவம்.

"அட போங்க ஆத்தா என்று அவர்கள் என் தோளைப் பிடித்த பிடியிலிருந்து விலகி ஓடினேன். விளையாட்டுப் புத்தி.

'அம்மாவாம்... யாரு இவங்க? இவங்க எப்படி எனக்கு அம்மாவாக முடியும்? எனக்கு தான் ஏற்கனவே ஆத்தா இருக்காங்களே...' என்கிற நினைப்பு எனக்கு.

வளர்க்கிறேன்னு சொன்னேன். எங்ககிட்ட நல்லா ஒட்டிக்கிட்டான். இப்ப இவனை விட்டுட்டு இருக்கிறதை என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியலை. அய்த்தானையும் கேட்டுட்டேன். சரின்னிட்டாக. இங்க, லேனா நல்லா இருப்பான், மணி.”

“மாட்டேன் ஆச்சி. இன்னைக்கு நான் ஒரு தீர்மானத்தோட தான் வந்திருக்கேன். இவனை அழைச்சுகிட்டுப் போகாம நான் தேவகோட்டையை விட்டுப் போறதா இல்லை...”

“சொன்னாக் கேளு மணி” என, ஒரு கையைப் பிடித்து என் பெரியம்மா உள்ளே இழுக்க...

“வீட்டை விட்டு வெளியே வா...’ என்று, என் அம்மா இழுக்க, நானோ, “ஆத்தாவை விட்டுட்டு வரமாட்டேன்” என்று பெரிதாக அழ... இழுபறியில் வென்றவர், அம்மா என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. (இக் காட்சியை மட்டும், ஒரு டி.வி தொடர் இயக்குநரிடம் சொன்னால், நாலு ‘எபிசோட்’ ஓட்டியிருப்பார்)

அம்மா – அப்பாவின் வசதி பற்றி, எனக்கு ஏதும் தெரியாது. ஆனால், பெரியப்பா முத்துராமன் நல்ல சம்பாத்தியக்காரர். உத்தமபாளையத்தில், வட்டிக் கடைகள், அரிசி மில்; தாராபுரத்தில் ஐஸ் ப்ரூட் கம்பெனி; தேவகோட்டையில் ஒரு முரட்டு வீட்டில் பாதிப் பங்கு. இதுபோக, நவீன பங்களா என்று, ஏக வசதி. பணத்திற்கு முடையே இல்லை.

இவ்வளவு வசதிகளையும் விட்டு விட்டு, நான் மெட்ராசுக்கு போவதா? அங்கே எப்படி இருக்குமோ? வசதிகள் போதாது என்று அரசல் புரசலாகக் கேள்விப்பட்டது நினைவுக்கு வந்தது.

சென்னையில் வந்து இறங்கினேன். எல்லாமே மிரட்சியாகப் பட்டன. அப்பாவுக்கு என, கார் ஒன்று

மாலை மங்கியதும் எனக்கு "கழுதை இப்ப வந்திடும், புடிச்சுக் குடுத்துடறேன்" என்றாராம், பெரியம்மா.

"இந்தத் தடவை, லேனாவை நான் மெட்ராசுக்கு அழைச்சுகிட்டுப் போகவா... கூடப் பொறந்ததுக பார்க்கணும்குதுக" என்றார், அம்மா.

"கூட்டிக்கிட்டு போகத்தான் வேணும்கிறியா?" என்ற பெரியம்மாவுக்கு, என்னை விட்டுப் பிரியச் சம்மதமில்லை.

மறுநாள், அம்மா புறப்படும்போது, "வாடா, மெட்ராசுக்கு... அப்பாவைப் பார்க்க வேணாமா?"

"அப்பாவா... இது என்ன 'புதுசாய்... எனக்குத் தான் அப்பச்சி இருக்காங்களே...' என்று மனது சொல்ல, "மாட்டேன். நான் வரலை..." என்றேன்.

'ஏண்டா, இப்படிப் பாசமே இல்லாமப் போனே... அப்பாவை எப்பப் பார்க்கிறது?'

'அப்பாவா... அது யாரு... கருப்பா, சிவப்பா அவர்...?'

நான் அமைதியாக அம்மா முகத்தைப் பார்க்க, அவர்கள் முகத்தில் ஏகமாய் ஏமாற்றம்.

"போயிட்டு வரேன் என்று, அம்மா சொல்லிக் கொள்ளும்போது, மனதில் கொஞ்சமாவது பிரிவுத் துன்பம் ஏறணுமே... யாரோ ஒரு விருந்தினர் வந்து போனால் ஏற்படுமே உணர்வு, அவ்வளவுதான். அதற்கு மேல் எந்த உணர்வும் இல்லை.

அம்மா இப்படி, 'விசிட்டிங் மதராக' ஆகிப்போக, ஒருநாள், அந்த அதிசயம் நிகழ்ந்தது.

பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, "லேனா... இங்க பாரு, யாரு வந்திருக்கான்னு..." என்று, வரவேற்பு அறைக்கு அழைத்தார் பெரியம்மா.

"லேனா, எப்படியிருக்கே? கிட்ட வா, இவங்கதாண்டா உன் அப்பா" என, அறிமுகப்படுத்தினார், அம்மா.



தமிழ்வாணன் பேச, சக பேச்சாளராக சிவாஜிகணேசன்

பின்னால் அமர்ந்திருந்த என்னை, சபை முழுக்கக் கண்களால் தேடியது. என் உடம்பிற்குள், 'ஜிகு ஜிகு' என இனம் புரியாத உணர்வுகள் பரவ, இதயம் வேகமாகப் படபடக்க, உடம்பில் உள்ள நரம்புகள் எல்லாம் துடிக்க ஆரம்பித்தது போன்ற உணர்வு.

'என்ன இது, திடீர் அறிவிப்பு? அப்பா சொல்லவே இல்லையே! "இன்னைக்கு மேடை ஏறி சிவபுராணம் பாடுறியா?" என்று கேட்டிருந்தால் கூடக் கொஞ்சம் தைரியத்தை வளர்த்துக் கொண்டிருக்கலாம்...'

ஆனால், இது திடீர் அறிவிப்பு! மிரண்டு போனேன்!

என்ன மாதிரியான வாய்ப்பு இது! அதுவும், கிரிதாரிப் பிரசாத் போன்றவர்களின் முன்னால், சபையில் அருட்செல்வர் நா. மகாலிங்கம், சத்திய கங்கை பகீரதன், அவ்வை நடராசன் போன்றவர்கள்கூட அமர்ந்திருந்ததாக நினைவு.

எழுந்து நின்றேனே தவிர, நகரக்கூடக் கால்களுக்குத் துணிவு வரவில்லை.

இருந்தது. எனக்கு இது அதிசயமாகப் பட்டது. கார் வைத்திருக்கிற அளவிற்குப் பணக்காரரா?

ஆனால், வீடு ஏன் இப்படி இருக்கிறது? அடுக்களை. கழிப்பறை தவிர, இரண்டே அறைகள்.

'ஐயையோ... இங்கு வந்து வகையாக மாட்டிக் கொண்டோம் போலிருக்கிறதே...' என்றுதான், முதலில் தோன்றியது.

அக்கா, தம்பி, தங்கை மீதெல்லாம் ஒட்டுறவே வரவில்லை. ஏதோ பழகக் கிடைத்த சம வயது நண்பர்கள் போலவே தோன்றினர். அக்கா, பாசம் காட்ட முயன்றபோது விலகிப் போனேன்.

அப்பாவைப் பார்க்க வருகிற பிரபலங்கள், ஏபர்கள், வாசகர்கள், சக எழுத்தாளர்கள் மற்றும் ஓவி. கள் எனப் பலரும் எனக்குள் மிகுந்த மிரட்சியான தோற்றத்தையே, அவரை பற்றி உருவாக்கினார்.

'தேவகோட்டையில் நான் பார்த்த சினிமாக்கள் பழனி, வீரபாண்டிய கட்டபொம்மனில் வரும், சிவாஜி கணேசன், அப்பாவுக்கு நண்பரா...! அட, பரவாயில்லையே! இதென்ன, அப்பாவைப் பார்க்க, ஊமைத்துரை ஜெமினிகணேசன் வீடு தேடி வருகிறாரே...' என நினைப்பேன்.

ஒருமுறை, சென்னை தர்மப்பிரகாஷ் ஓட்டலில், வள்ளலார் சன்மார்க்க சங்க விழா நடந்தது, அதில், அப்பா தமிழ்வாணன், ஆன்மிகப் பேச்சாளர் கிரிதாரி பிரசாத், இன்னும் பலர் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அப்பாவின் முறை வர, "என் பேச்சை ஆரம்பிக்கு முன், என் மகன் லேனாவை மேடை ஏற்ற விரும்புகிறேன். ரொம்ப நல்லாப் பாடுவான். குறிப்பாக, சிவபுராணத்தை மட்டும் இப்போது பாடிக் காட்டப் போகிறான்..." என்று அறிவித்தாரே பார்க்கலாம்.



# என்னைப் பற்றிப் பேட்டி கண்ட தந்தை!

வள்ளலார் சன்மார்க்க சங்க விழாவில், சிவபுராணத்தைப் பாட, அப்பா அழைக்க, உடம்பெல்லாம் வெட வெடவென உதற, மேடை ஏறினேன்.

“பரவாயில்லையே... இந்த வயசிலேயே சிவபுராணம் பாடுவியா?” என, கிரிதாரி பிரசாத், முதுகைத் தட்ட, என் உயரத்திற்கு மைக் குறைக்கப்பட்டது.

வாழ்க்கையில் முதல் முதலாக இவ்வளவு பெரிய சபையை எதிர்கொண்டு நிற்கிறேன். தொண்டையில், யாரோ பஞ்சை வைத்து அடைத்து வைத்ததைப் போன்று உணர்ந்தேன். கால்கள் நர்த்தனமாட, கைகள் தானாகத் தாளமிட, தர்மசங்கடமான நொடிகள் மெல்ல நகர்ந்தன.

அப்பாவோ, ‘சும்மா பாடு! தைரியமாகப் பாடு, நான் இருக்கேன்ல?’ என்றார்.

3


அது, ஆன்மிகவாதிகளின் சபை. பலரும், சிவபுராணத்தை நன்கு

'வா... மேலே வா...' என்று அப்பா ஜாடை காட்ட, என்ன மாதிரியான வாய்ப்பு என மகிழ்வதற்குப் பதிலாக, 'மாட்டி விட்டீங்களே அப்பா...' என்றுதான் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டேன்.

மெல்ல நடந்தேன் மேடையை நோக்கி. கால்கள் இரண்டிலும் யாரோ கற்களை கட்டி விட்ட மாதிரியான உணர்வு.


●●●

## தமிழ்வாணன் பற்றி மு.கருணாநிதி



எப்போதும் 'கல கல' சிரிப்பு!
எதற்கும் கலங்காத உள்ளம்!
எதிரிகளையும் கவர்ந்திடும் எழுத்து!
என் நண்பர் தமிழ்வாணன்
என்றும் என் நினைவில் இருப்போரில் ஒருவர்!
ஒருமுறை தென்றல் அலுவலகத்தில் சந்தித்தோம்!
அப்பொழுது என் உச்சந் தலையில் வழுக்கை ஆரம்பம்.
அதைப் பார்த்து அவர் கேலி செய்தார்! வயதாகி விட்டதென்று
இல்லை இளமையின் அடையாளம் என்றேன்.
எப்படி என்றார்.
தேங்காயில் வழுக்கை இருந்தால், அது இளநீர் அல்லவா!
அப்படி என்றேன்.
அவரைச் சந்திக்கும் போதெல்லாம் இதை நினைவுபடுத்தி
ரசித்து மகிழ்வார்
நல்ல படைப்பாளி மட்டுமல்ல.
ரசிகரும் கூட!

20.10.2003
அவர் நினைவு போற்றும்
தம்பி லேனாவுக்கு,
மு.க.



முன்னாள் முதல்வர் பக்தவத்சலம், அவ்வை நடராஜன்,
கவிஞர் சவுந்தரா கைலாசத்துடன் தமிழ்வாணன்...

"சொல்லு..."

"சரியாப் பாடினேனாப்பா...?"

அவரது பாராட்டைக் காதில் கேட்டுக் கொண்டால், உரையாடத் தெம்பு வரும் என்று கணக்குப் போட்டேன். அது நன்கு வேலை செய்தது.

"பிரமாதமாப் பாடினே..."

"தப்பில்லாமல் பாடினேனாப்பா... நான், சிவபுராணம் பாடுவேன்னு, அம்மா சொன்னாங்களாப்பா?"

"இல்லை. பெரியம்மாவே சொன்னாங்க. உன்னைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாதுல்ல. அதுனால அவங்ககிட்டே கேட்டு நிறையத் தெரிஞ்சுக்கிட்டேன்..."

அப்பாவின் இந்த அக்கறை, எனக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. யார் யாரையோ பேட்டி கண்ட

அறிந்தவர்கள். சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று சில வரிகளை விழுங்கிவிட்டுக் கீழே இறங்கிவிட முடியாது.

அப்பாவுக்கு பெருமைமிகு கணங்களைத் தந்தாக வேண்டும். கண்களிலோ நீர். தவறின்றிப் பாடி விட்டேன் என்றுதான் நினைக்கிறேன்.

'பல்லோரும் ஏத்தப் பணிந்து...' என முடித்து, சபையை வணங்கினேன்.

சபையில், அப்படி ஒரு கை தட்டல்! அதுவும் நீண்ட நேரம்! அப்பாவைப் பார்த்தேன். அவர் முகத்தில் அப்படி ஒரு பெருமிதம். மேடையில், மாலையால் கவுரவிக்கப் பட்டேன்.

வாழ்வின் முதல் மாலை. மாலையில் இருந்த செண்டு காலைத் தொட்டது. ஆள் உயர மாலை என்பார்களே! அது இதுதானோ!

அப்பா தன் பேச்சைத் துவங்கும்போது, "திருவாசகத்திற்கு உருகுகிறவர்களைப் பார்த்திருக்கிறேன்... பையன், சிவபுராணத்திற்கே உருகி விட்டான்..." என்று, என் கண்ணீர்ச் சம்பவத்தைக் கலகலப்பாக மாற்ற, மறுபடி கரவொலி தந்தது சபை.

விழா மேடையின் நினைவுகளை அசை போட்டபடியே, அப்பாவுடன் காரில் வீட்டை நோக்கிப் பயணம். நான் சிவபுராணம் பாடுவேன் என்பது அப்பாவுக்கு எப்படித் தெரிந்தது?

இந்த வியப்புக் குறி, வினாக் குறியாக மாறியது. கேட்டு விடலாமா...? தைரியம் வரவில்லை. பயம் தான் தலைதூக்கியது. எச்சிலை விழுங்கி, நெஞ்சை அவருக்கு தெரியாதபடி தடவியபடி, "அப்பா, வந்து வந்து..." என்றேன்.

தந்தை, என்னைப் பற்றியும் பெரியம்மாவிடம் பேட்டி கண்டிருக்கிறாரே!


பெருமை பிடிபடவில்லை.

ஒன்பது வயதுவரை, 'விசிட்டிங் தந்தை'யாக இருந்தவர், பத்தாவது வயதில், என்னால் மிக அண்ணாந்து பார்க்கப்பட்டவர். நெஞ்சத்தால் எனக்கு அந்நியமாய் இருந்தவர், இப்போது, மிக நெருங்கி விட்டதாகவும், பயம், உயர் மதிப்பீடுகள் ஆகியவை மாறி, பாசம் வளர்த்திருப்பதாகவும் உணர்ந்த முக்கியமான கணங்கள் இவை.

ஆனால், இந்தப் பெருமிதக் கணங்கள், நெடு நாளெல்லாம் நீடிக்கவில்லை. ஏன் என்று சொல்கிறேன்.

●●●

**தமிழ்வாணன் பற்றி பாவேந்தர் பாரதிதாசன்**



நல்லொழுக்கம் நாணயம்
நேர்மை நடு நிலைமை
எல்லாமிருக்கும் எழுத்தாளன்
- சொல்வேன்
அமிழ்தான சொல்லிட்டுக்
கற்கண்டை ஆக்கும்
தமிழ்வாணன்! என்ன தடை?
தன்னலமோ வேம்பு
தமிழ் நலமே கற்கண்டு
தன்மானக் கொள்கை
தழுவுகின்ற - நண்பன்
தமிழ்வாணன் வாழ்க!



# துப்பறியும் எழுத்தாளரால் துப்பறிய முடியாத விஷயம்!

அப்பாவிடம் நான் வாங்கிய அடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதுவும் ஒருமுறை, இருமுறை அல்ல, பலமுறை!

ஏன் அடி வாங்கினேன் என்று விளக்கப் போனால், வெட்கத்தை விட்டுச் சில விஷயங்களை வெளிக்கொட்ட வேண்டியிருக்கும்; வேறு வழியில்லை.

சிறு வயதில், என்னிடம் காசு திருடும் பழக்கம் உண்டு. என் வாழ்நாளில் இதுவரை, எந்தப் பேட்டியிலும் (வானொலி, 'டி.வி' மற்றும் பத்திரிகை) வெளிவராத செய்தி இது. வாசகர்களாகிய உங்களிடம் தான். முதல் முறையாக இதை வெட்கம் விட்டுப் பகிர்ந்து கொள்கிறேன்.

பெரியம்மா வீட்டில், ஓரணாவைக் கூட வெளியில் பார்க்க முடியாது. அலமாரியில் பணத்தை வைத்துப் பூட்டி, சாவியை வேஷ்டியில் சொருகி வைத்துக் கொள்ளும் பழக்கம், பெரியப்பாவிடம் உண்டு. அவர் தூங்கும்போதோ, தலையணைக்கடியில் சாவி போய் விடும்!

24



# செம மாத்து மாத்திய, தந்தை!

என் ஐம்பது ரூபாய் தேவைக்காக, குளிக்கப் போய் விட்ட அப்பாவின், ‘பர்ஸை’ நோட்டம் விட்டேன். ‘பர்ஸ்’ இருந்தது. கையில் எடுத்தேன்.

அப்போதுதான் குளிக்கப் போன அப்பா, என் வருகை நேரத்தைக் கணித்து, சட்டெனக் கதவைத் திறந்து வெளியே வந்து, “திருட்டுப் பயலே... இந்தக் காரியத்தை நீ மட்டும் தான் செய்வே, எனக்கு அப்பவே சந்தேகம்...” என்றபடி, என்னை செம மாத்து மாத்தினார்.

பேனா பிடிக்கிற அவரது கை, சம்மட்டி பிடிக்கிற கையாக ஆகிப்போனது. அடியா அது? இடி!

நான் கத்தின கத்தில், பலர், எங்கள் வீட்டு வாசலில் திரள, என் புகழ் (?) அக்கம் பக்கத்து வீடுகளில் பரவி விட்டது. அம்மா மட்டும் என்னை விட்டுக் கொடுக்கவில்லை. எனக்கென அப்பாவிடம் சில சமாதானங்களைச் சொன்னார்.

அதே நேரத்தில், மேல் தீனிப் பிரியனான எனக்கு, கடையில் கிடைக்கும் தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிட வேண்டும் என்கிற ஆவல் ஏற்படும். பெரியம்மாவிடம் சாப்பாட்டைத் தவிர ஏதும் கிடைக்காது.

கடைத் தெருவுக்கு, கூடவே போனால் கூட எதுவும் வாங்கித் தரமாட்டார்கள். மிஞ்சிப் போனால், கொடுக்காய் புளி, முந்திரிப் பழம் கிடைக்கும்; மிட்டாய், ரொட்டி? ஊஹும்! மூச்!

எங்கள் சென்னை வீட்டில் சமையல்காரராக இருந்த முத்து என்பவர், விடுமுறைக்கு அவரது ஊரான தேவகோட்டைக்கு வந்தால், என்னை வந்து பார்ப்பார். கடைக்கு அழைத்துப் போய், வேண்டிய தின்பண்டங்களை வாங்கிக் கொடுப்பார்.

கயிற்றால் ஆன மிட்டாய் ஒன்று. கயிற்றைச் சுற்றியபடி இழுத்தால் இது சுற்றும். இது, எங்கள் வீட்டு எதிர்க் கடையில் பிரபலம். கொஞ்ச நேரம் இதில் விளையாடி விட்டு, எப்போது சாப்பிடத் தோன்றுகிறதோ, அப்போது அதைச் சாப்பிடுவேன்.

சென்னை வந்ததும், காட்சிகள் மாறின. அப்பாவும் சரி, அம்மாவும் சரி, காசையும் பர்சையும் அங்கங்கே பார்வையில் படும்படி வைத்து விடுவர். (பிள்ளைகள் எப்படிக் கெட்டுப் போகின்றனர் பார்த்தீர்களா, பெற்றோரே!)

எங்கள் வீட்டிலிருந்து ஒரு திருப்பம் வரை நடந்தால், தீனதயாளு தெரு முனையில், நாயர் டீக்கடை அதில் 10 காசுக்கு விரித்த கையின் அளவிற்கு ஒரு 'பன்' கிடைக்கும். 'பன்' என்றால், எனக்குக் கொள்ளை ஆசை.

அம்மா தினமும், 10 பைசா தான் தருவார். தினம் ஒரு 'பன்' உறுதி. ஆனால், அதற்கு மேல் கடலை மிட்டாய், தேன் மிட்டாய் என ஆசைப்படுவேன். கிடைக்காது.

"தெரியாமல் பண்ணிட்டான். இனிமே இந்தத் தப்பை பண்ணமாட்டான். அவன் வேணும்னு கேட்கிறதை வாங்கிக் குடுத்தா கை ஏன் நீளப் போகுது! புள்ளையை அடிக்காதீங்க. நல்லது கெட்டது தெரியாத வயசு. நீங்களும் 'பர்ஸை' இப்படியா வெளியில் வைக்கிறது?" என்று அம்மா சொல்ல, அந்த நேரம் சமாதானம் ஆனார் அப்பா.

கொஞ்ச நாளைக்கு என் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டேன். ஆனால், இந்த பாழும் நாக்கிற்கு, நான் அடிமையாகிப் போனது ரொம்பத் தவறாகி விட்டது.

பையன் திருந்தி விட்டான் என்கிற நம்பிக்கையில், மறுபடி, 'பர்ஸ்' வெளியே எட்டிப் பார்க்க, என் லீலை மீண்டும் ஆரம்பமானது.

இந்தக் காலகட்டத்தில் நான் சற்று வளர்ந்திருந்தேன். தீனி ஆசை குறைந்து, பம்பரம், காற்றாடி என, என் தேவை உலகம் விரிந்தது.

அம்மாவிடம் காசு கேட்பேன், கொடுப்பார். ஆனால், என் தேவை அதிகம். செலின் பிராண்ட் நூல், மாஞ்சா போடக் கடுக்காய், பாட்டில் ஓடு, வஜ்சிரம், மாஞ்சா காய்ச்ச சட்டி, கலர் பவுடர் அது இது என, ஒரு மாஞ்சா நூல் கண்டு தயாரிக்க 15 ரூபாய் தேவை.

அப்போது, கிருஷ்ணன் என்கிற வகுப்புத் தோழன், என்னுடன் நெருக்கமானான். போக் சாலையில் (இப்போதைய செவாலியே சிவாஜி கணேசன் சாலை) அவன் இருந்தான். கொஞ்சம் பொல்லாத்தனம் கொண்டவன். சக மாணவர்கள் வம்பு செய்தால், வாய் பேசாது; கைதான் பேசும். ஆளும் வாட்ட சாட்டமாக இருப்பான்.

ஒருமுறை, "சிந்தாதிரிப்பேட்டை போகலாம் வா. அங்கு, பர்ஸ்ட் கிளாஸ் மாஞ்சா நூல், பாணாக் காத்தாடி எல்லாம் கிடைக்கும். ஆனா, 15 ரூபா பத்தாது. 50 ரூபாய் கொண்டா.

அவனோடு மோத முடியாது. யாரிடமும் புகார் செய்ய முடியாது. திருடனுக்குத் தேள் கொட்டிய கதைதான்.

காத்தாடி, மாஞ்சாவை எங்களது அந்தச் சிறிய வீட்டில் எப்படி மறைத்து வைப்பது? தெரிந்தால், ஏது காசு என்கிற கேள்வி வராதா? நண்பன் கிருஷ்ணனின் காத்தாடி, மாஞ்சா என்று சொல்லலாம். நம்புவார்களா வீட்டில்?


இப்படிப்பட்ட மனப் போராட்டத்துடன் வீட்டை நோக்கி நடந்த நேரத்தில், நாயர் கடை வாசலில் நின்றிருந்தான், தம்பி ரவி.

"வீடே கலவரமா இருக்கு. அப்பா, 'பர்சு'ல 50 ரூபாய் குறையுதாம். அப்பா, கோபமா இருக்காங்க. வீட்டுக்கு போனா, உனக்கு அடி விழும். அம்மா தான் என்னை இங்க அனுப்பினாங்க. 'லேனா வந்தா, அப்படியே திரும்பிப் போகச் சொல்லு. ராத்திரி, 11.00 மணிக்கு வரச்சொல்லு. அப்பா தூங்கிடுவாங்க. அந்த நேரம் வரலாம்'ன்னு, சொல்லச் சொன்னாங்க..." என்றான்.

'வகையா மாட்டினியா?' என்றது மனது.

முதல் முறையாக பயப் பந்து நெஞ்சுக்கும், வயிற்றுக்குமாய் உருள ஆரம்பித்தது.


●●●



**தமிழ்வாணன் பற்றி**
**பாடகர் டி.எம்.சவுந்தர்ராஜன்**

'நீங்க ஏன் கறுப்புக் கண்ணாடி போடுறீங்க...' என்று அவரிடம் ஒருமுறை கேட்டேன். 'மற்றவர்களின் உணர்வை உன்னிப்பாகக் கவனிக்கவும், என் உணர்வுகளை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இருக்கவும் தான், கறுப்புக் கண்ணாடி அணிகிறேன்...' என்றார்.

வேறு எவரிடமாவது இப்படி இதை எல்லாம் பகிர்ந்து கொண்டிருப்பாரா என்று எனக்குத் தெரியவில்லை.



ஜப்பானிலிருந்து திரும்பிய அப்பாவுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு. உயரத்தில் நின்று ரசிக்கும் நான்.

உங்க ஏரியாவுல ஒரு காத்தாடி கூடப் பறக்காது. அத்தனை காத்தாடியையும், டீல் விட்டு அறுத்து விடலாம். அப்புறம் நீ தான் காத்தாடி கிங் என்று ஆசையைக் கிளப்பினான். கிருஷ்ணன்.

ஆசை கண்ணை மறைத்தது. ஏதோ தைரியத்தில், அப்பாவின் 'பர்ஸி'லிருந்து, ஐந்து 10 ரூபாய்களை உருவி, சிந்தாதிரிப்பேட்டைக்கு நானும், கிருஷ்ணனுமாய் சைக்கிள் ரிக்ஷாவில் போனோம்.

மாஞ்சா, பாணாக் காத்தாடி என, தேவையானவற்றை வாங்கி வந்தபோது, கிருஷ்ணன், என்னைச் சக்கையாய் ஏமாற்றி, சில நோட்டுகளை அமுத்திக் கொண்டு விட்டது தெரிய வந்தது. கொஞ்சமாகத்தான் மிச்சம் கொடுத்தான்.

விரும்பியபடி சாப்பிட்டுவிட்டு, பாண்டி பஜாரில் திறக்கப்படாத ஒரு கடையின் படிக்கட்டில் அமர்ந்தேன். பாணாக் காத்தாடிகளை கடை ஷட்டரில் சாத்திவிட்டு, மாஞ்சா நூல் கண்டை டிராயர் பாக்கெட்டில் திணித்துக் கொண்டேன்.

இரவு மணி, *11.00* என்பதை உறுதி செய்து கொண்டு, நாயர் கடையை நோக்கி நகர்ந்தேன். தம்பி ரவி, அங்குதான் நின்றிருந்தான்.

"அப்பா தூங்கிட்டாங்களா?"

"இன்னும் இல்லை. வீடே முழிச்சிக்கிட்டிருக்கு..."

"ஐயோ... நான் என்ன செய்ய இப்ப?"

''வீட்டுக்கு வா. அம்மா உன்னைச் [illegible]டிட்டு வரச்சொன்னாங்க..."

''நான் மாட்டேன். அப்பாகிட்ட யார் அடி வாங்குறது?"

பின் வீட்டு புண்ணியகோடி முதலியார், நம்ம வீட்டுக்கு வந்திருக்கார். அவரை அழைச்சிட்டு வந்திருக்காங்க, அம்மா. அப்பாவிடம் அவர் பேசியிருக்கார். 'நீ, *11.00* மணிக்கு வருவே. ஆனாப் பையனை அடிக்கக் கூடாது. இனிமே அவன் தப்பு செய்ய மாட்டான். நான் பொறுப்பு'ன்னு, அப்பாகிட்ட சொல்லி அவரை சமாதானப்படுத்தி இருக்கிறா..."

"நான் நம்ப மாட்டேன். நீ பொய் சொல்றே..."

''இல்ல, உண்மையாத்தான். உன்னை அடிக்காம புண்ணியகோடி முதலியார் பார்த்துக்குவார். சும்மா வா..."

ரவி முன்னால் நடக்க, நான் வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்தேன். இதயம் தட தடவென ரயில் தடமாய் மாறியது.



# உங்கப்பாவை நீ புரிஞ்சிக் கிட்டது இவ்வளவுதான்!

‘இந்தப் பாழும் காத்தாடிக்கும் மாஞ்சாவுக்கும் ஆசைப்பட்டது தப்பாப் போச்சே! கிருஷ்ணனின் வார்த்தையை நம்பி சிந்தாதிரிப்பேட்டைக்குப் போய் வகையா மாட்டிக் கொண்டோமே...’ என்று, மனம் மருள ஆரம்பித்தது.

இரவு *11.00* மணிக்கு வீட்டுக்குள் வரச் சொல்லி அம்மாவின் உத்தரவு. மணியோ மாலை *6.00* தான். இன்னும் ஐந்து மணி நேரம் என்ன செய்வது?

மேலும் *11.00* மணிக்குப் போனால், சாப்பாடு கிடைக்குமோ இல்லையோ, உதை உறுதியாகக் கிடைக்கும். கையில் இருக்கிற காசுக்குச் சாப்பிட்டு வைப்போம் என்கிற முடிவிற்கு வந்தேன்.

அந்தக் காலத்தில், பாண்டி பஜாரில், ‘ஓட்டல் டீலக்ஸ்’ மிகப் பிரசித்தம். இங்கு வறுத்த கறி, பரோட்டா சாப்பிட, வெகுநாள் ஆசை! அடி வாங்க உடம்பைத் தயார் செய்து கொள்ள வேண்டியதுதான்.

6



# மறுபடி வாங்கிய அடி!

இவ்வளவு நடந்தும், என் காசு திருடும் பழக்கம் மாறவே இல்லை. பயத்தை, ஆசை வென்றபடி இருந்தது. அப்பாவிடம் எவ்வளவு அடி வாங்கியும் படிந்துபோன என் சுபாவத்தை மாற்றிக் கொள்ளவே முடியவில்லை.

ஆனால், இம்முறை வாங்கிய அடி, காசு திருடியதற்காக அல்ல.

அது ஒரு வித்தியாசமான காரணம். படிப்பு சார்ந்த அடி இது. அதிலும் எனக்கு கணக்கு, ஆங்கிலம் சுத்தம். சுட்டுப் போட்டாலும் வராது என்கிற நிலை. கல்யாணசுந்தரம் என்கிற ஓய்வுபெற்ற ஆசிரியரை, வீட்டிற்கே வந்து, 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார், அப்பா.

பொறுமையின் பூஷணமான அவரையே, நான் கோபப்பட வைத்தேன். கவனம் படிப்பில் இருந்தால்தானே? எங்கோ கவனம், எதிலோ லயிப்பு... எப்படி வரும் படிப்பு?

வீட்டுப் பாடம் கொடுப்பார், டியூஷன் சார்.

7